1979 ஏப்ரல் 16]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள் 713, 714 ஆகிய இரண்டும் மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, தள்ளி வைக்கப் படுகின்றன. வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில்(*)உடுக்குறியிடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகளை எடுத்துக் கொள்வது குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து 41-வது விதியின் கீழ். . . .

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே இரண்டு ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறேன். அந்த நிகழ்ச்சிக்குள் நான் போக விரும்பவில்லை. துப்பாக்கிச் சூட்டிற்குப் பிறகு' அவர்கள் சாட்சியம் சொல்லக் கூடாத முறையில் இடைஞ்சல் செய்யும் வகையிலே, மருத்துவ மனையிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டு, பிறகு அவர்கள் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே இதைப் பற்றியெல்லாம். . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆய்விலே இருக்கிறது. என் அறையிலே வந்து கேளுங்கள்.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : நானும் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதுவும் இதுவரை எடுத்துக் கொள்ளப் படவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தாங்கள் கொடுத்திருப்பது கவன ஈர்ப்புத் தீர்மானம். 41-வது விதியின் கீழ். . . . .

திரு. மு. அம்பிகாபதி : ஒரு முக்கியமான விஷயம். தமிழ்நாடு சுற்றுலா வாரியத்தின் ஊழியர்கள் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் வீடுகளை காலி செய்யும் படி. . . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கொடுத்திருக்கிறீர்கள். அதுவும் ஆய்விலே இருக்கிறது. உட்காருங்கள். 41-வது விதியின் கீழ்...... ......

திரு. ரா. மார்க்கபந்து: தினமும் ஆசிரியர்கள் கைது செய்யப்படுகிறார்கள். அதைப்பற்றி ஒரு தீர்மானம் கொடுத்து, 7, 8 நாட்கள் ஆகிவிட்டன. இன்னும் எடுத்துக் கொள்ளப் படவில்லை என்றால், என்ன அர்த்தம்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதுவும் ஆய்வில் இருக்கிறது. அமருங்கள்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தயவுசெய்து நாங்கள் சொல்வதைச் சற்று கேளுங்கள். அங்கே பஸ்கூட போவதில்லை. விவசாயிகள் பிரச்னையிலே இப்படி காலங் கடுத்துவது சரியா? எனவே தயவு செய்து இதை உடனே எடுத்துக் கொள்ளுங்கள். பதிலே கிடையாது என்றால் என்ன?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஆய்விலே இருக்கின்றது. என் அறையிலே வந்து கேளுங்கள். இதற்குப் பதில் சொல்கிறேன். 41-வது விதியின் கீழ் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எம். ஏ. லத்தீப்.....(குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். நான் ஏற்கனவே பதில் சொல்லி விட்டேன். விதி 42-ன் கீழ் ஒரு பிரச்னையைக் கொடுத்துவிட்டு, இடையிடையே இப்படி எழுந்தால், நான் அடுத்த பிரச்னைக்கு எப்படிப் போவது? தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தயவுசெய்து மரபைக் காப்பாற்றுங்கள். திரும்பத் திரும்ப ஆய்விலே இருக்கின்றது என்றும் அறையிலே வந்து கேளுங்கள் என்றும் சொல்வதில் பிரயோஜனமில்லை. அவையிலே வந்து கேட்கும்போது. இன்றைக்கு அல்லது மறுநாளைக்கு எடுததுக் கொள்ளப்படும் என்று சொல்லுங்கள். அதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதைத் தான் நான் முதலிலேயே சொல்லிவிட்டேன். அறையிலே வந்து கேளுங்கள். திரு. எம். ஏ. லத்தீப்.